# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 35 வ. ஆ. 2007 வைகாசி 6, ஐ. அவ்வல் 18, (19-5-76) புதன் புத்தகம் 30. இதழ் 8


"விடுதலை இயக்கத்தில் எல்லோரும் பங்குபற்றவேண்டும். எவரும் தனக்கு இதில் பங்கில்லை என்று தட்டிக் கழிக்கமுடியாது. சுதந்திர இனமாக வாழுவது எங்களெல்லாருக்கும் பொதுவான தார்மீகப் பொறுப்பு. ஆகவேதான் உங்களெல்லோரையும் உற்சாகமூட்டி அழைக்கிறேன். வாருங்கள். விடுதலை காண்போம். சுதந்திரம் பெறுவோம்.

# தமிழின விடுதலைப் போருக்கு தார்மீக ஆதரவு வழங்குவீர்!

## உலக நாடுகளுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் தந்தை செல்வா அறைகூவல்!

தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை உலக நாடுகள் எல்லாம் ஏற்றுக்கொண்ட ஒரு தத்துவம். அந்த உன்னதமான கொள்கையின் அடிப்படையில் 2500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பாரம்பரியமுடைய ஈழத்தமிழ் தேசிய இனம் தன் சுய நிர்ணய உரிமையை நிலைநாட்டி சுதந்திரமும் இறைமையுமுள்ள ஒரு சமுதாயமாக உலக அரங்கில் நிற்கத் தீர்மானித்திருக்கும் இந்நேரத்தில், இந்த நியாயமான போராட்டத்திற்கு தார்மீக ஆதரவை அளிக்குமாறும், உலக ஸ்தாபனரீதியிலும் சமாதானத்தின் அடிப்படையிலும் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆதரவு தருமாறும் உலக நாடுகளை வேண்டுகிறேன்."

—இவ்வாறு சென்ற 14.5.76 வெள்ளிக்கிழமை பிற்பகல் பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாசாலை மண்டபத்தில் அமரர் இராசமாணிக்கம் அரங்கில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் மாநாட்டில் தலைமைப் பேருரை நிகழ்த்திய மூதறிஞர் தந்தை செல்வா குறிப்பிட்டார். தந்தையின் வேண்டுகோட்படி அடலேறு திரு. மு. ஆலாலசுந்தரம் அவர்களினால் வாசிக்கப்பட்ட குறித்த தலைமையுரை விபரம் வருமாறு:-

—2-ம் பக்கம் பார்க்க

# 'தமிழ் ஈழம்' அமைவது தவிர்க்கமுடியாதது!

## தமிழர் விடுதலைக்கூட்டணியின் அரசியல் பிரகடனம்!

"இந்நாட்டுத் தமிழ்த் தேசிய இனத்தின் நிலையான வாழ்வைப் பாதுகாப்பதற்கு ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஓர் சுதந்திர இறைமையுள்ள மதச்சார்பற்ற சோசலிசத் தமிழீழ அரசை மீள்வித்துப் புனரமைப்புச் செய்வது தவிர்க்கமுடியாததாகிவிட்டது என இம்மாநாடு பிரகடனப்படுத்துகிறது. சுதந்திரத்திற்கான புனிதப் போரில் தம்மை முற்றுமுழுதாக அர்ப்பணிக்க முன்வருமாறும், இறைமையுள்ள சோசலிசத் தமிழ் ஈழ அரசு என்ற இலக்கை அடையும்வரை தயங்காது உழைக்குமாறும் தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொதுவாகவும், தமிழ் இளைஞர்களுக்குச் சிறப்பாகவும் இம்மாநாடு அறைகூவல் விடுக்கின்றது."

—மே 14ம் திகதி பண்ணாகத்தில் நடைபெற்ற தமிழர் விடுதலைக்கூட்டணியின் முதலாவது தேசிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட வரலாற்றுப் புகழ்பெற்ற அரசியல் பிரகடனத்தில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் அவர்களினால் முன்மொழியப்பட்டு, திருவாளர்கள் மு. சிவசிதம்பரம், செ. இராசதுரை, திரு. குணரத்தினம், டாக்டர் உதுமா லெப்பை ஆகியோரினால் வழிமொழியப்பட்டு, நாடு முழுவதிலுமிருந்து வந்திருந்த ஐநூற்றுக்குமேற்பட்ட கூட்டணிப் பிரதிநிதிகளாலும், அரை இலட்சத்துக்கு மேற்பட்ட பொது மக்களினாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ள இந்த அரசியல் பிரகடனத்தில், தமிழ் ஈழம் அமைப்பது தவிர்க்கமுடியாதது என்ற நிலைமைதோன்றுவதற்கான அரசியல் காரணிகளும், தமிழ்த்தேசியஇனம், 1948ம் ஆண்டிலிருந்து இந்நாட்டில் சமூக, அரசியல் பொருளாதார கலாச்சார வாழ்விலிருந்து திட்டமிட்டு ஒதுக்கப்

—3-ம் பக்கம் பார்க்க

# குடியரசு நாளில் எதிர்ப்பு மே21-பாடசாலைபகிஷ்கரிப்பு!

சிறீலங்காவின் குடியரசு நாளான மே 22ம் நாளை தமிழ் ஈழம் அடங்கிலும் துக்க நாளாகவும், பகிஷ்கரிப்பு தினமாகவும், அனுட்டிக்குமாறு தமிழர் விடுதலைக்கூட்டணி தமிழினத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. மே 15ந் திகதி இரவு தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது நடவடிக்கைக்குழு மூளாயிலுள்ள நாவலர் அமிர்தலிங்கம் அவர்களின் இல்லத்தில் கூடி மே 22 பகிஷ்கரிப்பு நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து பின்வரும் முடிவுகளை எடுத்தது.

(1) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் (அதாவது தமிழ் ஈழம் முழுவதும்) குடியரசு நாள் எதிர்ப்பு நடவடிக்கையின் ஓரங்கமாக— மே 21ம் நாள் வெள்ளிக்கிழமை தமிழ் மாணவ மாணவிகள் பாடசாலைகள், கல்லூரிகளை பூரணமாகப் பகிஷ்கரிக்க வேண்டும். மாணவ, மாணவியரை அந்நாளில் தமிழ் பெற்றோர் பாடசாலைக்கு அனுப்பக் கூடாது. பாடசாலைகளில் நடைபெறும் குடியரசு நாள் கொண்டாட்டங்களில் மாணவ, மாணவியரோ, பெற்றோரோ பங்குபற்றக் கூடாது; பாடசாலை மாணவிகள், 'பாண்ட்' வாத்தியம் வாசிக்கவும் செல்லக் கூடாது. தமிழ்த்தாயின் மானம் காக்கும் கண்மணிகளான மாணவ மாணவிகள் பாடசாலைப் பகிஷ்கரிப்பு நடவடிக்கையை வெற்றிகரமாக நடத்தி முடிக்கவேண்டும்.

(2) மே 22 — குடியரசு தினக்கொண்டாட்டங்களில் எந்த ஒரு தமிழனும் பங்குபற்றாது அவற்றை முற்று முழுதாகப் பகிஷ்கரிக்க வேண்டும்.

—3-ம் பக்கம் பார்க்க

## ஞாயிறு இதழில் மேலும் செய்திகள்!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவதுதேசிய மாநாட்டுப் படங்கள் மேலும் செய்திகள் 23-5-76 ஞாயிறு சுதந்திரனில் இடம் பெறும்.

—ஆர்

## அரை இலட்சம் பேர் திரண்டனர்!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாட்டின் இறுதி நிகழ்ச்சியாக பொன்னாலைச் சந்தியில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் சுமார் ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். இக்கூட்டத்துக்கு இரவு 8மணி மட்டுமே பொலிசார் ஒலிபெருக்கி அனுமதி வழங்கியிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை இயக்கத்துக்கு பார்வையாளர் வேண்டாம் எல்லோரும் பங்காளிகளாக மாறுவோம்!

பிரதிநிதிகளே, தமிழர் கூட்டணி அங்கத்தவர்களே, பார்வையாளர்களே, தமிழ்ப் பேசும் பெருங்குடி மக்களே, இளைஞர்களே,

தமிழினத்தின் சரித்திரத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கட்டத்தில் நாமின்று நிற்கின்றோம். இலங்கைவாழ் தமிழர்களாகிய நாங்கள் சரித்திரம் தெரியாத காலம் முதலாக இந்தத் தீவிலே வாழ்ந்து வந்திருக்கிறோம்; இலங்கையும் இந்தியாவும் கடலால் பிரிக்கப் படாத நிலத் தொடர்ச்சியாக இருந்த காலம் முதல் நாமிங்கு வாழ்ந்திருக்கிறோம். ஆனால் ஏறக்குறைய இரண்டாயிரத்து ஐநூறு வருடங்கள் முதலாக சிங்கள இனமும் இத்தீவிலே வாழ்ந்து வந்திருக்கிறது. அக்காலத்துக்கு முன்பிருந்தே தமிழரும் சிங்களவரும் இருவேறு இனங்களைச் சேர்ந்தவர்கள்; அதாவது விஜயன் இங்கே வந்து சிங்கள இனத்தின் அத்திவாரத்தை உருவாக்கிய காலத்திற்கு முன்பேயே நாம் வேறு இனம். கிறிஸ்துவின் முன் 2ம் நூற்றாண்டில் துட்டகைமுனுவும் எல்லாளனும் போர் செய்த போதும் நாம் இரு இனங்களே. அதற்குப் பின் சோழ சாம்ராஜ்யம் இங்கு படையெடுத்த போதும் நாம் இரு இனங்களே. இன்னும் பிற்காலத்தில் ஐரோப்பியர் இங்கே வந்தபோதும் நாம் உள்ளதாக எடுத்து காட்டுகிறது. இச்சரித்திர உண்மையை 1797ம் ஆண்டு பதியப்பட்ட கிளிகோன் குறிப்பு தெளிவாக்குகின்றது "இந்தத் தீவின் ஆட்சியை மிகப்புராதன காலந்தொடங்கி இருவேறு தேசிய இனங்கள் தங்களுக்குள் பிரித்துக்கொண்டன. முதலாவதாக வளவை ஆறுமுதல் சிலாபம் வரை, தெற்கிலும் மேற்கிலும் உள்நாட்டில் சிங்களவர் வசிக்கின்றனர். இரண்டாவதாக வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தமிழர் உரிமை கொண்டுள்ளனர்."

தேசிய இனங்களுக்குரிய இலக்கணத்தால் தமிழரும் சிங்களவரும் இன்றும் இருவேறு இனங்களே. அவர்கள் சரித்திரத்தால், தேசத்தால் மொழியால், சமயத்தால் கலாச்சாரப் பண்பாட்டால், மரபுகளால் வேறுபட்ட இரு இனங்கள்.

## தீர்ந்த கனவு

மேற் சொல்லியபடி முதல் முதலாக ஆங்கிலேயரால் ஒன்று பிணைக்கப்பட்ட சரின மக்களான சிங்களவரும் தமிழரும் ஆங்கில ஆட்சியிலிருந்து விடுதலை பெற இயங்கிய காலந் தொட்டு தமிழ்த் தலைவர்கள் சேர். பொன். அருணசலம் காலம் முதலாக சுதந்திர இயக்கத்தில் முன்னணியில் நின்று உழைத்தவர்கள். அப்போதே அவர்கள் சிங்கள மக்களோடு சேர்ந்து உருவாக்கி குறைந்த பட்சக் கோரிக்கையாக அரசியலமைப்பைத் திருத்தும் வகையில் ஒரு 6 அம்சக் கோரிக்கையை விடுத்து, அது மூன்று மாதத்தில் பயனுடைய பரிசீலனைக்கு வராவிடில் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இயங்குவோம் என்று பிரகடனம் செய்தோம். இங்கே தமிழர் கூட்டணி வல்வெட்டித் துறையில் கருவாய்த்தோன்றி திருமலையில் உருவாய் பிறந்ததென்று நான் குறிப்பிடவேண்டும். தமிழ் ஈழத்தின் தலைநகராய் திருமலை திகழுமென்று நம் எதிர் காலம் காட்டும்.

## உரிமைகள் பறிமுதல்

சிங்களரோடு சேர்ந்து வாழவும், இலங்கையின் ஆங்கிலேயரால் கற்பிக்கப்பட்ட ஒற்றுமையை குலையாமல் காக்கவும் விரும்பி தமிழினம் இயங்கியதனால், நாம் இன்று ஆளப்படுமினமாக அழிந்தொழிகின்றோம். சிங்கள ஆட்சி சிறிது சிறிதாக நாட்டின் அதிகாரம் முழுவதையும் கைப்பற்றி சட்டத்தாலும் நிர்வாகச்செயலாலும் தமிழினத்தை இப்படி உரிமையற்று ஆளப்படுமிடத்திற்கு ஒதுக்கியுள்ளது. சிங்களத் தலைவர்கள் காலத்துக்குக் காலம்செய்த உறுதி மொழிகளும் ஒப்பந்தங்களும் காற்றிலே பறந்துவிட்டன, தமிழ் மக்களின் செயல் படுத்தி தமிழ் மக்களின் மற்றைய வாய்ப்புகள் அனைத்தையும் பறிக்கிறார்கள், அல்லது தடுக்கிறார்கள். மேலும் நாம் வாழ்ந்த பாரம் பரிய நிலமான தமிழ் ஈழத்திலே சிங்களக் குடியேற்றத்தைப் புகுத்தி எங்கள் நிலத்தைப் பறித்து வருகிறார்கள் அதுமட்டுமல்லாமல் தமிழ் நிலத்தில் சிங்களவர் சட்டவிரோதமாக குடியேற உற்சாகமூட்டி அச்செயலை சட்ட ரீதியாக ஒழுங்குபடுத்துகிறார்கள். ஆனால் தமிழ் நிலத்தில் உணவு உற்பத்தி செய்ய சட்டவிரோதமாக குடியேறினால் அவசரகாலச் சட்ட விதிகளும், பட்டாளமும், நீதிமன்றத் தண்டனையும் அவனைத் துரத்துகின்றன.

## அபிவிருத்தி இல்லை

இன்று தமிழனுக்கு உத்தியோகத்தில், வியாபாரத்தில் வாய்ப்போ இடமோ இல்லை. எல்லாவற்றிற்கும் மேலாக தமிழினத்தின் கல்வியைப் பறிக்கும் முகமாக தரப்படுத்தல் என்று ஒரு மூடுமந்திரத் திட்டத்தை அமுல் நடத்தி தமிழ் இளைஞர்களின் கல்வியைத் தடை செய்து இனத்தின் எதிர் காலத்தை இருட்டடிக்கிறார்கள். அநியாயங்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டமோ இயக்கமோ நடத்தினால், சிங்களப் பொலிசும் பட்டாளமும் இன்னும்



சேனநாயக்காவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் கதியும் உங்களுக்குத் தெரிந்ததே. இதற்கு மேலும் சொல்ல வேண்டுமென்றால் நீக்கமுடியாத சரத்து என்று பிரிவிக்கவுன்சிலால் தீர்க்கப்பட்ட சோல்பரி அரசியல் திட்டத்தின் சிறுபான்மையோருக்குப் பாதுகாப்பளிக்கும் 29ம் சரத்து இன்று எங்கே? அது தூக்கி வீசி எறியப்பட்டு மறைந்துவிட்டது.

## தமிழ் ஈழம் ஏன்?

தமிழருக்கு உரிமை கொடுக்கும் எந்தச் சிங்கள அரசியலமைப்பினதும் கதி. அடுத்த சிங்கள ஆட்சியின் கையில் அப்படியேயாகும். எந்த அரசியல் அமைப்பினும் தமிழ் மக்களுக்குநீக்க

# தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாட்டில் மூதறிஞர் செல்வா நிகழ்த்திய தலைமையுரை!

சிங்களவரும் தமிழரும்— இருவேறு இனங்களே.

## தனியாட்சி நடத்தினோம்

16ம் நூற்றாண்டில் போர்த்துகேயர் இங்கே படையெடுத்தபோதும் தமிழ் ராஜ்யம் அவர்களோடு சுதந்திரத்திற்காகத் தனித்து நின்று போராடி அந்நியர் படைவலிக்கு ஆற்றாது அடங்கியது. அப்போதும் அயல் நாட்டிலே வாழ்ந்த சிங்களவர் எங்களை வேறு இனம், வேறு நாடு என்று கருதி எங்கள் உதவிக்கு வரவில்லை. இறுதியாக இலங்கை முழுவதையும் ஆங்கிலேயன் ஆட்சியேற்று சிங்கள நாட்டையும் தமிழ் நாட்டையும் 1833லே தன் வசதிக்காக ஒரு நிர்வாகத்தின் கீழ் அமைத்தான். அந்த நேரத்தில் கூட கண்டி நாட்டுச் சிங்களவர் தங்களை இலங்கையின் கரையோர நாடுகளோடு ஒன்று சேர்க்கக் கூடாதென்று ஆட்சேபித்தார்கள். ஆனால் இன்று சிங்களவர் கையில் இலங்கை முழுவதின் ஆட்சி வந்தடைந்து, தமிழரும், தமிழினமும், தமிழ் நாடும் அவ் அந்நியர் ஆட்சியின் கீழ் தொடர்ந்து அல்லலுற்று அழியும் நிலையில் இருக்கிறது

## சரித்திரம் கூறும் உண்மை

இந்த அடிப்படையான சரித்திரத்தை எவரும் மறுக்கமுடியாது. 1803லே வரையப்பட்ட அலெக்சிமித் படம் இலங்கை வாழ் தமிழர்களின் பாரம்பரியமான பகம் இலங்கையின் கிலும் கிழக்கிலும் வாழ்வதில் அபாயம் உண்டு என்றும் சந்தேகித்துத்தானிருந்தார்கள். ஆனாலும் சுதந்திரதிற்காக சிங்களத் தலைவர்களை நம்பியும் இலங்கையின் ஒற்றுமையை விரும்பியும் இயங்கினார்கள். இன்று அது பெரும் மோசடியாகவும், ஏமாற்றமாகவும் தீர்ந்த கனவாகவும் காட்சியளிக்கிறது.

## தமிழர் கூட்டணி உருவாகியது

ஆங்கிலேயர் ஆட்சி நீங்கும் பொழுதினிலே இந்த நாட்டின் ஆட்சி அமைப்பில் ஓர் இனம் மற்ற இனத்தை வாக்குப் பலத்தால், அடக்கி ஆளமுடியாத பிரதிநிதித்துவம் அமைய வேண்டுமென்று தமிழ் மக்கள் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் தலைமையில் கேட்டார்கள். அது கிடைக்கவில்லை. மாறாக சோல்பெரி அரசியல் திட்டம் தமிழ் மக்கள்மேல் சுமத்தப்பட்டது. தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு மாறாக அதனை ஏற்றதமிழ்ப் பிரதிநிதிகள் அடுத்த தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டார்கள். ஒற்றையாட்சிக்கொள்கையில் தமிழருடைய தனித்துவம் பாதுகாக்கப்படமாட்டாதென்று தமிழ் காங்கிரசிலிருந்து விலகி எங்களில் சிலர் தமிழரசுக் கட்சியை உருவாக்கி இணைப்பாட்சிக்குட்பட்ட தமிழரசில் தமிழ் மக்களுக்கு நிரந்தர பாதுகாப்புக் கிடைக்குமென்று நம்பி இயங்கினோம். 1972ம் ஆண்டு இத்தகிக்கோரிக்கை அரசியல் நிர்ணய சபையில் நிராகரிக்கப்பட்டது. இதன் மேல் தமிழர்கள் எல்லோரும் சேர்ந்து தமிழர் கூட்டணியென்ற அமைப்பை குடியுரிமை, வாக்குரிமை, நில உரிமை, மொழிஉரிமை, சம வாய்ப்புரிமை, சமய உரிமை இன்னும் தனிச் சுவாதினமும் உயிர் வாழ்வும் எல்லாம் படிப்படியாகப் பறிக்கப்பட்டுள்ளன.

## மலையகத் தமிழர்

உதாரணமாக மலைநாட்டில் வசிக்கும் இந்திய வம்சாவளியினர் சம உரிமையோடு பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெறுவார்கள் என்று சொல்லி சுதந்திரம் பெற்ற, அடுத்த 6 மாதத்திற்குள் அத்தமிழ் மக்களை குடியுரிமையற்ற நாடற்றவர்களாக்கினார்கள். அடுத்து அவர்களுடைய வாக்குரிமையைப் பறித்து பாராளுமன்றத்தில் அவர்களுடைய பிரதிநிதித்துவத்தை நிர்மூலமாக்கினார்கள். இன்று அவர்களை ஆடுமாடுகள் போல் கணித்து இந்தியாவுடன் ஒப்பந்தம் எழுதி அவர்களுடைய விருப்பமின்றி எத்தனைபேரை யார் ஏற்பதென்று தீர்த்துக்கொண்டார்கள். இந்தியாவிற்குப் போகவேண்டிய தொகை அதற்காக விண்ணப்பம் செய்யவில்லை இதனால் மலைநாட்டில் இவர்களுடைய வாழ்க்கையை நிர்மூலமாக்கி அம்மக்களை நடுத் தெருவிலே விட்டு இச் சிங்கள ஆட்சி அட்டூழியமாக நிர்ப்பந்தம் செய்கிறது.

## பாரபட்சம்

அடுத்து 1956ம் ஆண்டிலே தனிச்சிங்களமே உத்தியோக மொழி என்று சட்[illegible] தார்கள் இன்றும் அத்தனிச் சிங்களச் சட்டத்தைச் வசதிப்பட்ட நேரத்திலும் இடத்திலும் சிங்களக் காடையர் படைகளும் பலாத்கார அட்டூழியங்களைச் செய்து தமிழினத்தை அடிமைத் தனத்தை ஏற்கும்படி நிர்ப்பந்திக்கிறது. நாநூறு வருடங்களுக்கு மேல் அந்நிய ஆட்சியின் கீழ் அபிவிருத்தி பெறாத தமிழ் ஈழம் அந்த நிலையிலேதான் இருக்கிறது. இப்படி பலவாறும் சிறீலங்கா ஆட்சி தமிழினத்தின் வாழ்வைச் சிதைத்தும், தனித்துவத்தை அழித்தும் ஏகாதிபத்திய வெற்றியை நிலை நாட்ட முற்பட்டுள்ளது.

## அரசியலமைப்பு விலக்கப்பட்ட ஒன்று

இந்த நிலைகளைத் திருத்த நாம் பல இயக்கங்களையும் போராட்டங்களையும் நடத்தினோம். இன்னும் சிங்களத் தலைவர்களோடு ஒப்பந்தங்கள் செய்தோம். மேலும் அடுத்து வரும் மாதங்களில் போராட்டமென்று குரல் எழுப்பும்பொழுது. எம் உற்சாகத்தையும் தீர்மானத்தையும் குலைக்க பேச்சு வார்த்தை என்ற ஒரு குரலை சிலர் எழுப்பியுள்ளார்கள். இதிலே சில தமிழரும் சேர்ந்திருக்கிறார்களென்று வருத்தப்படுகிறேன். இன்று நாம் வந்தடைந்த அரசியல் சூழ்நிலையில், அரசியலமைப்பை எவ்வகையில் திருத்தினாலும் அதனால் ஒரு பயனும் இல்லை அடுத்து வரும் சிங்கள அரசாங்கம் திருத்தப்பட்ட அரசியலமைப்பை விலக்கிவொதுக்கும்.

நான் பண்டாரநாயக்காவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் கதி உங்களுக்குத் தெரியும். நான் டட்லி முடியாத நிரந்தர பாதுகாப்பு இருக்கமுடியாது. இவை எல்லாவற்றையும் ஆலோசித்துத்தான், நாம் எமது பாரம்பரியமான இறைமையை நிலைநாட்ட சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலே இயங்கி தமிழ்ஈழம் மீண்டும் தனிநாடாகவேண்டுமென்று கேட்கிறோம்.

## காங்கேசன் இடைத்தேர்தல்

இன்றைய புதிய அரசியல் அமைப்பை சிங்கள மக்கள் உருவாக்கும் பொழுது எம்மில் பெரும்பாலோர் அரசியல் நிர்ணய சபையிலிருந்து விலகினோம். கடந்தபொதுத் தேர்தலில் சிங்கள அரசாங்கத்தின் கொள்கையில் ஒரு தமிழரேனும் தெரிவுசெய்யப்படவில்லை என்று உங்களுக்குத்தெரியும். ஆனாலும் அப்போது சிங்கள அரசாங்கம் தமிழ் மக்களின் ஒருபகுதியினர் இதனை ஏற்றார்கள் என்று கூறினார்கள். அதன் தொடர்பாக அக்கூற்றைச்சோதிக்கவும் தமிழ் மக்கள் இப்புதிய அரசியல் திட்டத்தை நிராகரித்தார்களென்று உலகத்திற்குணர்த்தவும் நான் தமிழர் கூட்டணியின் சார்பில் எனது பாராளுமன்ற ஆசனத்திலிருந்து விலகி மீண்டும் போட்டியிட்டேன். 2 வருடத்திற்கு மேல் தேர்தலை தடைசெய்து தாமதித்து அதற்குச் சகல ஆயத்தங்களையும் செய்த சிங்கள அரசாங்கம், அத்தேர்தலில் படு தோல்வியடைந்தது.

தமிழ் மக்கள் சிங்கள அரசியல் திட்டத்தை நிராகரித்தார்

—3-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அறவழியிலேயே அசைக்கமுடியாத நம்பிக்கைகொண்டவர் செல்வநாயகம்!

## லண்டன் சிறுபான்மை உரிமைக்குழுவின் அறிக்கை பகுதி-13

தற்போதுள்ள நிலைமையில் இலங்கையில் வாழும் இரு இனங்களுக்கிடையிலும் காணப்படும் உறவுகள் எந்நேரமும் சீர் கெடக்கூடிய அபாயம் தென்படுகிறது. இது என்ன உருவில் வெளிப்படும் என்பதுதான் இன்றைய கேள்வி.

1971ம் ஆண்டில் இந்நாட்டில் இடம்பெற்ற பயங்கரவாதக் கிளர்ச்சி நடவடிக்கைகள் தன்னகத்தே எவ்விதமான இன, மத, சாதிப் பூசல்களையும் கொண்டிருக்கவில்லை. சமீபத்தில் தடுப்புக் காவல் நிலையங்களில் இருந்து விடுதலையான பல தமிழ் இளைஞர்கள், 1971ம் ஆண்டு பயங்கரவாதக் கிளர்ச்சிகளில் தொடர்புகொண்ட சிலரைச் சந்தித்து உரையாடிய பின்னர் இது பற்றிக் கருத்துத்தெரிவிக்கையில், "மேற்படி கிளர்ச்சியாளர்களுடன் தொடர்புகொள்வதில் எவ்வித நியாயமும் இருப்பதாகத் தெரியவில்லை" எனக் கூறினர்.

1971 பயங்கரவாத நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபட்ட புரட்சிகர மக்கள் விடுதலை முன்னணியினரின் முக்கிய நோக்கங்களில் ஒன்று, தேயிலைத்தோட்டங்கள் அனைத்தையும் முற்றாக அழித்து, அங்கு வேலை செய்துகொண்டிருக்கும் பத்து லட்சத்துக்கு மேற்பட்ட இந்தியத் தமிழர்களையும் வெளியேற்றுதலாகும். இன்று தமிழ் வாலிபர்கள் மத்தியில் ஓர் புதிய 1971ம் ஆண்டு ஒன்றைத்தோற்றுவிக்கும் பேச்சுக்கள் பரவலாக எழுந்தபோதிலும் இதில் இன்னும் போதியளவு கவனம் செலுத்தப்படவில்லை;

பிரிவினையைப்பொறுத்தமட்டில் தமிழ்த் தலைவர்கள் மத்தியில் இன்னும் சரியான இணக்கம் காணப்படவில்லை என்றபோதிலும் (இது தமிழ் ஈழத் தீர்மானத்துக்கு முற்பட்ட நிலை) தவிர்க்கமுடியாத பலாத்காரக் கிளர்ச்சிகள் வழியாகவே இக்கோரிக்கையின் எழுச்சி முற்றுப்பெறும் என்பதற்கையமில்லை.

தமிழர் ஐக்கிய முன்னணியின் தலைவரான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் வயது முதிர்ந்தவர் மட்டுமின்றி "பார்க்கின்சன் நோய்" (Parkinson's Disease) என்ற ஒருவித நரம்பு நோயாலும் பீடிக்கப்பட்டவர். நலிவடைந்துள்ள அவரின் ஆரோக்கியம் காரணமாக தமிழர் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் ஓர் அடையாளச் சின்னமாகவே இன்று அவர் விளங்குகிறார்.

புதிய அரசமைப்புச் சட்டத்துக்குத் தமது எதிர்ப்பினை எடுத்துக்காட்டும் முகமாக 1972ம் ஆண்டு தமது பாராளுமன்ற பதவியை உதறித்தள்ளினார். அரசாங்கம் இவருடைய இடத்திற்கான மறு தேர்தலை இரண்டு வருடங்களுக்கு மேலாக இழுத்தடித்துவிட்டு ஈற்றில் 1975ம் ஆண்டு தேர்தலை நடத்தியபோது திரு. செல்வநாயகம் அவர்கள் வாக்களிக்கப்பட்ட 36,000 மொத்த வாக்குகளில் 26,000 வாக்குகள் வரையில் பெற்று வெற்றிவாகை சூடினார். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த எதிர்த்தரப்பு வேட்பாளர் 9,500 வாக்குகள் வரையில் பெற்றார். இதில் பெரும்பாலான வாக்குகள் தமிழர்கள் மத்தியில் உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினரிடையே இருந்து பெறப்பட்டதாகும். இத்தகைய "தீண்டத்தகாதோரின்" எண்ணிக்கை 15ல் இருந்து 25% வரையில் மதிப்பிடப்பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சியினர் காலத்துக்குக் காலம், தாழ்த்தப்பட்ட வகுப்பினரால் அனுபவிக்கப்படும் துன்பங்களைத் துடைத் தெறிவதில் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துவருவது மட்டுமின்றி உத்தியோக ரீதியாக இவ்வித சாதிப்பாகுபாடுகளை முற்றாகவே அழித்துவிடுதற்கும் முயன்றுவருகின்றனர். சகல தமிழ்ப்பேசும் மக்களுக்காகவும் குரல் கொடுக்கும் ஒரேயொரு கட்சி என்ற நிலையைச் சிறுபான்மைத் தமிழர்களின் செயல்கள் பலவீனப்படுத்துவதாக, தமிழரசுக் கட்சி பற்றி விமர்சிக்கும் சிலர் கூறுகின்றனர்.

எவ்வாறாயினும், இந்திய உபகண்டத்தைப் பொறுத்தமட்டில் இடம்பெறும் சகல அரசியல்களும், வலதுசாரியில் இருந்து தீவிர இடதுசாரிவரையில், மேல்தர அல்லது மத்திய வகுப்பினராலேயே வழிநடத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தனது தள்ளாமை காரணமாக, ஆங்கிலத்தில் உரையாடுவதானாலும் கூட திரு. செல்வநாயகம் அவர்களுக்கு ஒரு உதவியாளர் தேவைப்படுகிறது. சாத்வீகத்தில் அவருக்குள்ள நம்பிக்கை இன்னும் அசைக்கமுடியாததாகவே இருக்கிறது. தீவிரவாதங்கள் தலையெடுப்பதைக் கட்டுப்படுத்தவே நான் இயக்கத்தில் பங்கு கொள்கிறேன். என்னுடைய வழிகள் எப்போதும் அறவழிகளாகவே தொடர்ந்து இருக்கும். இப்பாதை மூலமாக நாம் கொடுக்கும் தொந்தரவுகளைத் தாளமாட்டாமல் அவர்களாகவே நம்மை வெளியே தூக்கி எறியும் காலம் வரும்." இதுவே அவருடைய கூற்று

பல தடவைகளில் பிரதான சிங்களக் கட்சிகளுடன் அவருடைய கட்சி செய்துகொண்ட ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் இடையில் அவை கிழித்தெறியப்பட்டதால் உண்டான ஏமாற்றங்களையிட்டும் அவர் நினைவு கூருவதுண்டு. புதிய அரசமைப்புச் சட்டம் சட்டவிரோதமானது" என அவர் தாக்குதல் தொடுத்த நேரத்திலேயே தனிநாடு பற்றிய எண்ணங்களையும் வெளியிட்டார்.

திரும்பவும் அவர் பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட்டதைக் கொண்டாடும், வெற்றிவிழாவில், அவர் பகிரங்கமாகத் தெரிவித்த கருத்துக்கள் பின் வருமாறு:- "என்னுடைய இந்த வெற்றியானது, எமது சொந்த மண்ணில் ஒரு ஈழத் தமிழ் நாட்டை உருவாக்குவதற்கு தமிழர்களினால் அளிக்கப்பட்ட சம்மதம் என்றே கருதுகிறேன். இதன் மூலம் அவர்கள் விடுதலைபெற்ற சுதந்திரமான இனமாக வாழ வழி காணப்படும்."

—வளரும்.

## யோகபுரத்தில் கூட்டணிக் கிளைகள்

கிளிநொச்சித் தொகுதியில் உள்ள யோகபுரம் பகுதியில் 2-5-76இல் தமிழர் கூட்டணிக்கிளையும், தமிழ் இளைஞர் பேரவைக்கிளையும் கிளிநொச்சி பா. உ. திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்களின் முன்னிலையில் அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கப்பட்டது. பெருந்தொகையான இளைஞர்கள் கலந்துகொண்ட மேற்படி வைபவத்தில் உரையாற்றிய திரு. வீ. ஆனந்தசங்கரி "கடைசித் தமிழ் மன்னன் மாவீரன் பண்டாரவன்னியன் ஆண்ட வன்னிப்பகுதியில் வாழும் மக்களின் பங்கு எமது சுதந்திரப் போராட்டத்துக்கு மிகமுக்கியமானது. அவர்கள் ஒருபோதும் துரோகத்துக்குத் துணை போனதாக வரலாறே கிடையாது. இவர்களது மொழிப்பற்றையும், தமிழ் ஈழத்தை அமைத்தே தீருவது என்ற உறுதியையுங்காணும்போது நான் பெருமையும் பூரிப்பும் அடைகிறேன்" என்று கூறினார்.

அத்துடன் வட்டுக்கோட்டைத் தொகுதியில் நடைபெறும் தமிழர் கூட்டணியின் மாநாட்டுக்கு, கிளிநொச்சி மாவட்ட தமிழர் கூட்டணிக் கிளை அனுப்பி வைத்துள்ள பிரேரணையை ஆதரிப்பதாக ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

### கூட்டணி நிர்வாகிகள்

தமிழர் கூட்டணியின் யோகபுரம் கிளையின் நிர்வாகிகள் விபரம் வருமாறு:-

தலைவர்: வே. கனகலிங்கம், (கி.ச. உறுப்பினர், துணுக்காய்) செயலாளர்: மு. கோபாலபிள்ளை, உப தலைவர்: சி. மகாலிங்கம், உப செயலாளர்; ச. நடராசா, பொருளாளர்: வே. சிவசுப்பிரமணியம், ஒன்பது பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

### தமிழ் இளைஞர் பேரவை

தமிழ் இளைஞர் பேரவையின் யோகபுரம் கிளையின் நிர்வாகிகள் விபரம்:

தலைவர்: திரு. து. நவரத்தினசிங்கம், செயலாளர்: க. பொன்னம்பலம், உப தலைவர்: ஆ. அமிர்தலிங்கம், உப செயலாளர்: ம. கருணேந்திரன், பொருளாளர்: ந. கருணாநிதி, பதின்மூன்று பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

## குடியரசு நாளி...

—1-ம் பக்கத் தொடர்

(3) மே 22ம் நாள் சிங்கள அரசு கண்டியில் சிங்கக் கொடியை உயர்த்தி விழாக் கொண்டாடும் அதே நேரத்தில் தமிழ் ஈழத்தில் தமிழர்கள் தமது இல்லங்களில் தமிழர் சுதந்திரக் கொடியான உதயசூரியன் கொடியை ஏற்றவேண்டும்; தமிழ் தேசிய கீதத்தைப்பாட வேண்டும்.

(4) மே 22ம் நாளன்று தமிழர் கூட்டணியின் தலைவர்களும் நடவடிக்கைக்குழு உறுப்பினர்களும் ஓர் அடையாள சட்ட மறுப்பை மேற்கொள்வார்கள். சட்ட மறுப்பு—பெரும்பாலும் அவசரகாலச் சட்டவிதியொன்றை மீறுவதாக இருக்கும்.

## 'தமிழ் ஈழம்...

—1-ம் பக்கத் தொடர்

பட்டுவந்த விதமும், வரலாற்று ரீதியாக தமிழ் தேசிய இனம் தனியாக வாழ்வதற்குத் தகுதிபடைத்த இனம் என்பதும், இத்தீர்மானத்தில் தெளிவுற விளக்கப்பட்டுள்ளது.

அத்துடன், உத்தேச தமிழ் ஈழ அரசின், சமுதாய, பொருளாதார கொள்கைகளும், இதில் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன

## விடுதலை இயக்...

—2-ம் பக்கத் தொடர்

கள் என்ற முடிவோடு, தமிழ் மக்கள் தமிழ் ஈழம் தனி நாடாகவேண்டுமென்ற கொள்கையை ஏற்று வலியுறுத்தினர்களென்று அத்தேர்தல் காட்டியது. நானும் தமிழ் மக்கள் இட்ட அக்கட்டளையை ஏற்று சுதந்திரத்திற்கும் விடுதலைக்குமாக உழைப்பேன் என்று வாக்குறுதி கொடுத்தேன்.

### அஹிம்சையே ஆயுதம்

இன்று தமிழர் கூட்டணியின் முதலாம் மாநில மகாநாட்டில் எங்கள் சரித்திரத்தில் ஒரு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கட்டத்தில் நிற்கிறோம். நாம் சிங்கள மக்களோடு சகோதரர்களாகத்தான் வாழ விரும்புகிறோம். எதிர்காலத்தில் அப்படித்தான் வாழுவோம். இப்பிரச்சினையைத் தீர்க்க ஈழத்தமிழ் நாடும் சிங்கள நாடுகளும் நட்புறவு அடிப்படையில் பரஸ்பரம் இயங்க வேண்டும். இந்த இலட்சியம் கைகூட இன்று நாம் கூட்டணியின் சார்பில் காந்தி காட்டிய அகிம்சை வழியைத்தான் சொல்லுகிறோம். சில இளைஞர் இந்த வழி சித்தி தரும் என்று நினைக்கவில்லை. பலாத்காரம் நிறைந்த உலகில் பலாத்காரமே விடுதலைக்கு வழி யென்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

ஆனால் நாமிருக்கும் சூழ்நிலையில் படை பலமில்லாமல் பயிற்சி பெற்ற பட்டாளமில்லாமல், வெளிநாட்டு ஆயுத உதவி இல்லாமல் பலாத்காரப் போருக்கு இடமில்லை. என்றும் தோல்வி காணாத ஆத்ம சக்தியைப் பலப்படுத்தி நடத்துகிற அகிம்சை இயக்கமே இந்தச் சூழ்நிலையில் நல்ல வழி, அன்றியும் இலட்சிய வழி, இன்னும் சாத்தியமான வழி. இந்த அகிம்சை இயக்கத்தில் நாங்கள் பல தியாகங்கள் செய்து துன்பங்களையுமடைவோம். இவற்றைத் தாங்கிக் கொண்டு நாம் சலியாது இயக்கம் நடத்தவேண்டும். கடந்த காலங்களில் அவ்வழியிலேயே நாம் எம்மியக்கங்களை நடாத்திக்கொண்டுவந்தோம்.

இன்று உலகம் முழுவதும் இளைஞர் சமுதாயம் நீதிக்காக பலாத்கார வழியில் பல நாடுகளிலும் போராடி வருவதை நாம் காண்கிறோம். எமது இளைஞர்களிலும் சில இவ்வழியில் நாட்டம் கொண்டிருப்பதை நாம் அறிவோம். இளைஞர்களை எவ்வித விசாரணையும் இன்றி சிறைகளில் அடித்து வதைப்பது, இப்பலாத்காரப்போக்கை வளர்ப்ப [illegible]

## இந்தி எதிர்ப்பு தியாகிகளின் உதவிநிதி வாபஸ்

தமிழ் நாட்டில் இந்தி எதிர்ப்பு போராட்டத்திலீடுபட்டவர்களின் குடும்பங்களுக்கு உதவிநிதி (பென்சன்) வழங்கும் சட்டத்தை திமுக அரசு நிறைவேற்றியிருந்ததல்லவா? திமுக அரசு நிறைவேற்றிய இந்தச் சட்டம் செல்லுபடியாகாதென்றும், இந்திய அரசியல் சட்டத்துக்கு முரணானதென்றும், பிரிவினை உணர்ச்சியைத் தூண்டுவதாக அமைகிறதென்றும் இந்திய தலைமை நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. இதைத் தொடர்ந்து தமிழ் நாட்டில் இந்தி எதிர்ப்பு தியாகிகளின் குடும்பங்களுக்கு அளிக்கப்பட்டு வந்த உதவிநிதி இரத்துச் செய்யப்படவுள்ளது.

## வள்ளுவர் முத்திரை...

—4-ம் பக்கத் தொடர்

மதிப்பார்ந்த தலைவர் திரு. பொ. சுப்பிரமணியம், தீர்மானத்தை முன்மொழிந்து விளக்கியவர் கொழும்பு, விவேகானந்த மகாவித்தியாசாலை அதிபர் திரு. எஸ். டகேசன், கவிதையில் வழிமொழிந்தவர் கவிஞர் செல்வி ச. இராஜம் புஷ்பவனம், அமுதன் எழுதிய வள்ளுவப் பிரசார நூல் 'அறுவடை' வெளியீடும், 'திருக்குறளில் சமயக் கருத்துக்கள்' என்னும் பொருளில் ஆய்வரங்கமும், 'அறுவடை' நாடக அரங்கேற்றமும் விழாவில் இடம் பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கூட்டணி 'தமிழர் விடுதலைக் கூட்டணி' 'TAMIL LIBERATION FRONT' ஆகியது!

சுதந்திரன்
SUTANTIRAN

## விடுதலைக் கூட்டணிக்கு மூன்று தலைவர்கள் நியமனம்!

மூதறிஞர் சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களுடன் திரு. கா. கா. பொன்னம்பலம், செள. தொண்டமான் ஆகியோரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். பண்ணாகம் மாநாட்டில் ஏற்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் இடைக்கால யாப்பின் மூலம் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. தமிழர் கூட்டணியின் இணைச் செயல் அதிபர்களாக நாவலர் அ. அமிர்தலிங்கமும். மு. சிவசிதம்பரமும் பிரதிநிதிகள் மாநாட்டில் ஏகமனதாக பலத்த கரகோஷத்தின் மத்தியில் தெரிவு செய்யப்பட்டனர்.

'தமிழர் கூட்டணி' யென்ற பெயருடன் கடந்த நான்கு ஆண்டு காலமாக இயங்கிவரும் இயக்கத்தின் பெயரை, அது ஏற்றுக்கொண்டிருக்கும் இனவிடுதலை இலட்சியத்தையும் உள்ளடக்கும் வகையில், 'தமிழர் விடுதலைக்கூட்டணி' 'Tamil Liberation Front' என்று மாற்றியமைப்பதென்று 14-5-76 மாலை நடைபெற்ற கூட்டணியின் அரசியல் மாநாட்டில் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

தமிழர் கூட்டணியின் பெயரை தமிழர் விடுதலை முன்னணியாக மாற்றியமைக்கவேண்டுமென்று 9-5-76 சுதந்திரன் ஆசிரியத் தலையங்கத்தில் வற்புறுத்தப் பட்டிருந்தது வாசகர்கள் அறிந்ததே, இதையடுத்து சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் அவர்களும் இதேயடிப்படையில் ஒரு பிரேரணையை தமிழர் கூட்டணி மாநாட்டுக்கு அனுப்பி வைத்திருந்தார்: திரு. கோவை மகேசனின் இப்பிரேரணையை விவாதித்த பின்னர், பண்டிதர் கா. பொ. இரத்தினம் பா. உ. அதையொரு தீர்மானமாக கொண்டு வந்தார். உடுப்பிட்டி முன்னாள் பா. உ. திரு. மு. சிவசிதம்பரம் அதை வழிமொழிந்தார். இதன்பின், தமிழர் கூட்டணியின் பெயரை, 'தமிழர் விடுதலைக் கூட்டணி' என தமிழிலும், 'Tamil Liberation Front' என்று ஆங்கிலத்திலும் மாற்றிக்கொள்வதென கொண்டுவரப்பட்ட இத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

# மண்டை பிளந்தது எலும்பு முறிந்தது! 13 தமிழ் இளைஞர் படுகாயம்!

## பொலிசாரின் வெறித்தாக்கு!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசிய மாநாட்டின் இறுதி நிகழ்ச்சியான பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக பொன்னாலையை நோக்கி லொறியொன்றில் சென்றுகொண்டிருந்த தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர்கள் சிலரை பொலிசார் வழி மறித்து குண்டாந்தடிகளாலும் துவக்குப்பிடிகளாலும் தாக்கியதுடன் அவர்களை கைது செய்துள்ளனர். இவர்கள் மீது ஏதாவது வழக்குத் தொடரப்படுமா அல்லது விடுதலையாவார்களா என்பது இதுவரை தெரியவில்லை.

பொலிஸ் தாக்குதலினால் மண்டை பிளந்தும், எலும்பு முறிந்தும் படுகாயங்களுக்குள்ளான இந்த வாலியர்கள், பொலிஸ் கண்காணிப்பின் கீழ் இப்போது யாழ். பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தாக்குதலுக்குள்ளாகி இரத்தம் சிந்திய தமிழ் இளைஞர்கள் விபரம் வருமாறு:—

ஆ. ரகுபதிபாலஸ்ரீதரன் (கொழும்பு தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர்) ரி. செளந்தரராசன் (நீர்கொழும்பு தமிழ் இளைஞர் பேரவை செயலாளர்) கே. உமா மகேஸ்வரன் (தமிழர் கூட்டணிகொழும்புக் கிளையின் செயலாளர்), கே. கோபாலன் (தம்பிலுவில் தமிழ் இளைஞர்பேரவை செயலாளர்) ச. செந்துராசா (உடுப்பிட்டி தமிழ் இளைஞர் பேரவை செயலாளர்) திரு. யோகேஸ்வரன் (கொழும்புத்துறை தமிழ் இளைஞர்பேரவை) அராலி ஆனந்தன், சாமி கனகலிங்கம், ரி. உதயகுமாரன், என். செல்வசிங்கம், எம். பத்மநாதன், குகபாலன், குமரன் தங்கராஜா (அக்கரைப்பற்று)

எண்ணெய் ஸ்நானத்தின் போது
ஒலிவ் ஸ்நானப் பவுடரைப்
பாவிப்பதால் தலையிலும் உடம்பிலும் உள்ள
அழுக்கை நீக்கி நறுமணம் கமளச்செய்கிறது.
ஒரு பைக்கற் -/25 சதம் மட்டுமே,
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
யாழ்ப்பாணம்.

## ● பருத்தித்துறையில் களேபரம்!

# அப்பாவி மக்கள் மீது பொலிசார் தாக்கு!

## ஆளுங்கட்சியை நக்கினாலும் அடிமையே தமிழன்!

ஆளுங்கட்சியை நக்கினாலும், அமைச்சர்களுக்கு கால் கழுவினாலும் இந்நாட்டில் தமிழன் ஆளப்படும் அடிமைச் சாதியே என்பதை எடுத்துக்கூறும் வகையில்— அமைச்சர் ஆரியதாசா கலந்துகொண்ட கூட்டத்துக்குச் சென்றிருந்த பருத்தித்துறை தமிழ் மக்களை— ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் குய்யோ முறையோ என்று கதறியழ, ஆடை குலைந்து அலறியோட— பொலிசார் குண்டாந்தடிகளினால் மிருகத்தனமாகத் தாக்கியதாகத் தெரிய வருகிறது. பொலிசாரின் இந்த வெறித்தாக்குதலுக்கு பருத்தித்துறைக்கு அமைச்சரை அழைத்தவர்களும் தப்பவில்லையாம். வீடு புகுந்து பொதுமக்களைப் பொலிசார் தாக்கிவருவதாகவும் தெரிய வருகிறது. 1974 சனவரி 10ல் நடைபெற்ற சம்பவம் போலவே பருத்தித்துறையில் அப்பாவிப் பொதுமக்கள் இப்போதும் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.

அமைச்சர் ஆரியதாசா, பருத்தித்துறையில் புதிய சந்தைக்கட்டிடம் ஒன்றைத் திறந்து வைப்பதற்காக பருத்தித்துறை நகரசபைத் தலைவரும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளருமான திரு. நடராசாவின் அழைப்பின் பேரில் 16-5-76 ஞாயிறு மாலை அமைச்சர் குமாரசூரியருடன் பருத்தித்துறைக்கு சென்றிருந்தாராம்—அமைச்சரை ஊர்வலமாக அழைத்துச் செல்வதற்கு பொலிசார் அனுமதி வழங்கவில்லையெனினும் சட்டத்தை மீறி ஊர்வலம் நடைபெற்றபோது — மாலைகள் போடுவதற்கு பொலிசார் அனுமதிக்கவில்லையாம். [illegible] நடைபெறுவதற்கு பொலிசார் ஒன்பது மணிவரையுமே அனுமதி கொடுத்திருந்தும், அமைச்சர் அங்கிருந்து சென்ற பின்னர் தொடர்ந்தும் கலைவிழாவை ஒன்பது மணிக்கு பின்னரும் நடத்த விழா பொறுப்பாளர்கள் முயற்சித்தார்கள் என்றும், அமைப்பாளர் ஒருவரின் மகன் பொலிசாருக்கு தாம் பயப்படப் போவதில்லையென்று வீராப்பு பேசியதாகவும் தெரிகிறது.

இதைத் தொடர்ந்து பொலிசார், மேடைக்குச் சென்று ஒலிபெருக்கியை பலவந்தமாகப் பிடுங்கியதுடன், கலை நிகழ்ச்சி காண வந்திருந்த அப்பாவி மக்களை குண்டாந்தடிகள், பெல்டுகள் துவக்குப்பிடிகள் ஆகியவை கொண்டு தாக்கினார்கள். குய்யோ முறையோ என்று அலறியோடிய பெண்கள், குழந்தைகள், அனைவரையும் துரத்தித் துரத்திப் பொலிசார் தாக்கியதுடன், வீடுகளுக்குள் புகுந்தும் பொது மக்களை இம்சித்தனராம். நாங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்காரர்கள் என்று சிலர் சொல்லியும் அவர்களையும் பொலிசார் விடவில்லையாம். அமைப்பாளர் ஒருவரின் மகனும் பொலிஸ் அதிகாரியொருவரினால் வீடு புகுந்து தாக்கப்பட்டாராம்,

"சிங்களவனுடன் சேர்ந்து வாழவேமுடியாது" என்றும் "சிங்கள அமைச்சரைக் கூப்பிட்டு, கலைவிழா காட்டுவதாகக் கூறி அடிவாங்கித் தருகிறானே பாவி"—என்றும் பலவாறு அரற்றியபடி— பொது மக்கள் அலறியோடிய காட்சி பரிதாபமாக இருந்தது.

சட்டத்தை மீற முனைந்த ஆளுங்கட்சிக்காரர்களைக் கைது செய்வதை விடுத்து ஏழைப்பொதுமக்களை வெறிகொண்டு தாக்கிய பொலிசாரின் எதேச்சாதிகாரச் செயல், வடமாராட்சி முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமது ஆத்திரத்தைக் காட்ட யாரும் அகப்படாத பட்சத்தில் பொலிசார் தம் கண்களில் படக்கூடிய தெரு நாய்களைக் கூடத் துரத்தியடிக்கிறார்களாம்.

## வள்ளுவர் முத்திரை வெளியிடுக!

இலங்கை அறிவு இயக்கம் அண்மையில் கொட்டாஞ்சேனை, விவேகானந்த சபை மண்டபத்தில் எடுத்த வள்ளுவர் விழாவில் திருவள்ளுவப் பெருந்தகை நினைவுக்கு அரசு சிறப்பு முத்திரை வெளியிடல் வேண்டுமெனத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது, பொது மக்கள் சார்பில் சமர்ப்பித்தவர் இயக்க

—3-ம் பக்கம் பார்க்க

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் கொழும்பு - 12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1976-ம் வருடம் மே மாதம் 19-ந் திகதி புதன் கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org